புதுமலர்: 10 பங்குனி - சித்திரை இதழ்: 02

# அனல்

இணை ஆசிரியர்கள்

யோ.நிக்ஷன்

வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்

ஆவியிலே **அனலாயிருங்கள்**

கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்

- ரோமர் 12:11 -

## சீயோன் தேவாலயப் பிரசுரம்

## ZION CHURCH PUBLICATION

01.03.2013

# பொருளடக்கம்


- அனலின் குரல்
- கதையும் கற்றதும் - நன்மையும் தீமையும்
- வாலிபர் வளாகம் - இதயங்கள் கிழியட்டும்
- இயேசு காயப்பட்டார்;நொறுக்கப்பட்டார்
- பெண்கள் பக்கம் - அமர்ந்திரு
- பக்தர்களின் பயிலகம்
- நற்செய்தி - பாரத்திற்கு முன் பாவம்!
- குறுக்கெழுத்துப் போட்டி - 54
- சந்தோஷம் இல்லை!
- அருட்பணியாளர் சரிதை - ஜாண் பன்யன், பிஷப் ஹீப்பர்
- மூவரி முத்துக்கள்
- வினா விடை - 56
- அனலின் ஆன்மீக விருந்து - "ஜெபம்"


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு,
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
347, Navalar Road,
Jaffna, Srilanka.


மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி


The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

ஆசிரியர் "அனல்",
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11

# அனலின் குரல்



இயேசு கிறிஸ்துவுக்குள் அன்பான வாசக உள்ளங்களுக்கு எமது அன்பின் வாழ்த்துக்கள்!. **மாறாத, எம்மை மறக்காத, உண்மையுள்ள ஆண்டவர் கடந்த நாட்களில் உங்களை ஆசீர்வதித்து நடத்திச் சென்றிருப்பாரென நம்புகின்றோம். இனியும் உங்களுடன் கூட இருக்க ஆவலாயுள்ள இயேசு கிறிஸ்துவை கனப்படுத்தி உங்கள் ஆண்டவராக வைத்துக் கொள்ளுங்கள்.**

**"நான் நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர் ஏசாயா 51:12"** இன்படி உங்கள் வாழ்க்கையில் நீங்கள் இழந்து போன அல்லது இதுவரையில் ஒருபோதும் பெற்றிராத ஆறுதலை, சமாதானத்தை அவர் உங்களுக்குத் தருவார். ***பாவத்தின் நிமித்தம் ஆறுதல் இழந்து, சமாதானமற்று அலைகின்றீர்களா? உன் குடும்பத்தின் எதிர்கால நிலையைக் குறித்து ஆறுதலற்று இருக்கின்றீர்களா? நன்மையை எதிர்பார்த்தவர்களிடம் இருந்து தீமை வந்ததால் வேதனையா? நிந்தைகள் அவமானங்கள் சூழ்ந்ததால் ஆறுதல் இழந்து தவிக்கின்றீர்களா?வியாதியின் கொடூரத்தால் சமாதானமற்று ஆறுதல் இழந்துள்ளீர்களா? பிசாசின் தாக்கத்தினால் வாழ்க்கையே நிலையற்று தவிக்கின்றீர்களா? எல்லாம் உங்களுக்கு இருந்தும் ஒரு சமாதானமில்லாது வேதனைப்படுகின்றீர்களா?***

ஆண்டவர் சொல்கிறார்: **"நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்"**

பிரியமான வாசகர்களே, ஆறுதலற்ற உங்களுக்கு ஆண்டவர் இயேசு ஆறுதல் தரக்காத்திருக்கின்றார். **"வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்களெல்லாரும என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" மத்தேயு 11:28**

என அழைக்கும் இயேசுவிடம் வாருங்கள். உங்களுக்கு நிறைவான ஆறுதலை, சாமாதானத்தை அவர் தருவார்.

— ஆசிரியர் —

# கதையும் கற்றதும்..

## நன்மையும் தீமையும்

ஒரு தாயார் தனது குடும்பத்தினரை அன்போடு பராமரித்து வந்தார். அவர்களுக்காக தனது முழு நேரத்தையும் ஒதுக்கி அவர்களுடைய தேவைகள் எல்லாவற்றையும் நிறைவேற்றி வந்தார். ஒவ்வொரு நாள் காலையிலும் அவர்களுக்காக ரொட்டி தயார்படுத்துவார். அதன் போது மேலதிகமாக, ஒரு ரொட்டியை தயார்பண்ணி யாரேனும் ஒரு பசியுள்ள வழிப்போக்கன் எடுப்பதற்காக தனது வீட்டின் யன்னல் ஓரத்தில் வைத்துவிடுவார். இது அவளது வழமையான செயல்.



ஒவ்வொரு முறையும் ஒரு கூன் விழுந்த முதியவர் ஒருவர் வந்து அந்த யன்னல் ஓரத்தில் வைக்கப்பட்டிருக்கும் ரொட்டியை எடுத்துச் செல்வார். ஆனால் அதை எடுக்கும் ஒவ்வொரு தடவையும் அந்த தாயாரின் செவிகள் கேட்கத்தக்கதாக, *"நீ செய்யும் தீமை உன்னிடமே தங்கியிருக்கும்; நீ மற்றவர்களுக்குச் செய்யும் நன்மையோ உன்னிடமாக திரும்பி வரும்"* என்ற வார்த்தையை கூறிவிட்டுச் செல்வார். இந்த செய்கை நாளாந்தம். தொடர்ந்து கொண்டேயிருந்தது. இதனால் அந்த தாயார் மன வேதனை அடைந்தார். ஒரு நன்றி கூட கூறாமல் இப்படி சொல்லி விட்டு செல்கிறாரே என்று எரிச்சலடையத் தொடங்கினார். இந்தக் காரியம் படிப்படியாக அவருடைய மனதில் அந்த மனிதன் மேல் ஒரு வெறுப்பை தோற்றுவித்தது.

ஒரு நாள். அந்த தாயாரால் தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இந்த முதியவரை எப்படியாவது இவ்விடத்தில் இருந்து அகற்றிவிட வேண்டும் என்று முடிவெடுத்தவளாய்

அந்த மேலதிகமான றொட்டியை தயார்பண்ணும் போது அதற்குள் நஞ்சை கலந்தாள். அவளுடைய மனதில் வெறுப்பு மேலோங்கியிருந்தது. அந்த தாயார் நஞ்சு கலந்த அந்த றொட்டியை யன்னலோரத்திலே வைப்பதற்காக எடுத்து சென்றாள். திடீரென அவளுடைய மனதிலே ஓர் கலக்கம்: *"நான் என்ன செய்கிறேன்? என்னால் எப்படி இவ்வாறான ஒரு காரியத்தை செய்ய முடிந்தது?"* என்று தனக்குள் நினைத்தாள். குற்ற உணர்ச்சி மேலிட அந்த றொட்டியை எறிந்து விட்டு புதிதாக இன்னொரு றொட்டியை தயார்பண்ணி அங்கே வைத்தாள். வழமை போல அந்த முதியவர் வந்து அதை எடுத்துவிட்டு *"நீ செய்யும் தீமை உன்னிடமே தங்கியிருக்கும், நீ மற்றவர்களுக்கு செய்யும் நன்மை உன்னிடமாக திரும்பி வரும்"* என்று கூறிவிட்டு சென்றார். அந்த தாயாரின் மனதிலே எழுந்த வெறுப்பை அந்த முதியவர் உணரவில்லை.

அந்த தாயாரின் ஒரு மகன் வேலை தேடுவதற்காக தூர தேசம் சென்றிருந்தான். ஆனால் அநேக நாட்களாக அவனிடமிருந்து எந்த



தொடர்புமே இல்லை. இதனால் அந்த தாயார் மனம் கலங்கி கொண்டிருந்தாள். தினமும் தனது மகனுக்காக இறைவனிடம் வேண்டுதல் செய்வாள். மகனை குறித்த துக்கம் அவளுடைய மனதை நிறைத்திருந்தது. அன்று மாலை அவளது வீட்டின் கதவிலே யாரோ தட்டும் சத்தம் கேட்டது. அந்த தாயார் கதவை திறந்த போது அவளால் அச்சரியத்தை அடக்க முடியவில்லை. நீண்ட நாட்களாக அவளை விட்டுப்பிரிந்திருந்த அவளுடைய மகன் மெலிந்த தோற்றத்துடனும் குழி விழுந்த கண்களுடனும் அங்கே நின்று கொண்டிருந்தான். தாயார் தன் மகனைக் கட்டியணைத்து அழுதார். தனது வாழ்விலே எதுவும் வாய்க்கவில்லை. தான் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாக செல்லவேண்டி ஏற்பட்டது என்று அந்த மகன் புலம்பி அழுதான். தாயார் அவனை அணைத்து ஆறுதல்படுத்தினார். அப்போது அந்த மகன் *"அம்மா நான் அநேக நாட்களாக சாப்பிடவில்லை, அதனால் நான் மிகவும் பெலவீனமடைந்து இருந்தேன். எமது வீட்டிற்கு சற்று தொலைவிலேயே நான் மயக்கமடைந்துவிட்டேன். நான் அப்படியே இறந்து போய் இருப்பேன். ஆனால் தற்செயலாக அந்த இடத்திற்கு ஓர் கூன் விழுந்த முதியவர் வந்தார். என்னை தட்டி எழுப்பினார். நான் அவரிடம் உணவு ஏதாவது தரும்படி கெஞ்சினேன். அப்போது அவர் ஓர் றொட்டியை என்னிடம் தந்து இது தான் என் அன்றாட உணவு. ஆனால் இன்று இது என்னைவிட உனக்குத் தான் தேவைப்படுகிறது என்று கூறினார். அதை சாப்பிட்ட பின்பு தான் என்னால் மீண்டும் எழுந்து நடக்க முடிந்தது, உங்களையும் காண முடிந்தது"* எனறு கூறினான்.

இதைக் கேட்ட தாயார் திடுக்கிட்டுப்போனார். தான் அன்று காலை தயார்பண்ணின நஞ்சு கலந்த ரொட்டி அவரது ஞாபகத்தில் வந்தது. அதை மட்டும் அவள் எறிந்திராவிட்டால் அதை அவளது அன்பு மகனே சாப்பிட்டு இருப்பான். தனது மகனது இறப்பிற்கு இவளே காரணமாயும் இருந்திருப்பாள். அப்போது தான் அந்த முதியவர் கூறும் வார்த்தைகளின் முக்கியத்துவத்தை அவள் முழுவதுமாக உணர்ந்தாள்.

ஆம்! இந்த வார்த்தைகள் எவ்வளவு உண்மை!. நம் வாழ்க்கை குறுகியது. நம் வாழ்நாளிலே மற்றவர்களுக்கு தீமை செய்வதால் எமக்கு என்ன பலன் கிடைக்கப்போகிறது? நாம் சோர்ந்து போகாமல் நன்மை செய்ய வேண்டும். நாம் செய்யும் நன்மையான செயலுக்கான பாராட்டும், அங்கீகாரமும் அத்தருணத்தில் கிடைக்காவிட்டாலும் எம் நன்மைகள் தொடர வேண்டும். மற்றவர்களுக்கு எம் வார்த்தைகளாலும், செய்கைகளாலும் நாம் செய்யும் தீமைகள் ஏதோவிதத்தில் எம்மிடமாகவே திரும்பி வரும். அப்போது அதன் பாதிப்பு பெரிதாகவே இருக்கும். எனவே எம் மனதில் ஓர் தீர்மானம் எடுப்போம். யாராக இருந்தாலும் நன்மையே செய்வோம். இதையே எம் பரம பிதாவும் எம்மிடம் எதிர்பார்க்கிறார்.

**"நீ செய்யும் தீமை உன்னிடமே தங்கியிருக்கும். நீ மற்றவர்களுக்கு செய்யும் நன்மை உன்னிடமாக திரும்பி வரும்"**

கெ. இன்பரூபன்

# 2013 வாக்குத்தத்தம்

## "நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை."

**அப்போஸ்தலர் 18:10**



வாலிபர் வளாகம்

# இதயங்கள் கிழியட்டும்!

**நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார்.**
**யோவேல் 2:13**

ஆண்டவரின் பெரிய நோக்கத்தையும், எதிர்பார்ப்பையும், அங்கலாய்ப்பையும் நாம் மேலேயுள்ள வசனத்தின் மூலம் அறியக்கூடியதாயுள்ளது. **வேதப் புத்தகத்தில் தேவன் எழுப்பிய ஒவ்வொரு தீர்க்கனின் மாபெரும் தொனியாய் தொனித்தது. "மனம் திரும்புங்கள்"** உண்மையாய் திரும்புங்கள் என்று மறுபடியும் மறுபடியும் தேவன் அழைக்கின்றார். இறுதியாக மல்கியா தீர்க்தரிசனப் புத்தகத்துடன் 400 ஆண்டுகள் தேவன் மௌனமாக இருந்துவிட்டார். **சிறிய தீர்க்கதரிசிகளில் ஒருவராகிய யோவேலின் வாயிலாக தேவன் தன்னுடைய பிள்ளைகள் எதைச் செய்யக்கூடாது என்றும்; எதைச் செய்ய வேண்டும் என்றும் மிகத் தெளிவாய் உரைக்கிறார்.**

## வஸ்திரங்களையல்ல:

வேதாகமத்தில் பல இடங்களில் வித்தியாசம் வித்தியாசமான சூழ்நிலைகளில் மனிதர்கள் வஸ்திரங்களைக் கிழித்து தங்கள்

மனதின் நிலையை (உணர்ச்சியை) காண்பித்தது உண்மை. ரூபன் தன்னுடைய சகோதரன் யோசேப்பை குழியிலே காணவில்லை என்றதும், **உடனடியாகவே வஸ்திரத்தைக் கிழித்தான். சகோதர அன்பு, பாசம், கரிசனை அதைச் செய்தது.**

40 நாட்கள் தேசத்தை வேவு பார்த்து வந்தவர்களுக்குள் யோசுவா, காலேப் இருவரும் அடங்குவார்கள். இவர்களும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்தார்கள். மற்றைய 10 பேரும் துர் செய்தியையும், கலகத்தையும் பரப்பினார்கள், கிளப்பினார்கள். இஸ்ரவேல் மக்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுப்பதற்கு காரணமாயும் 10 பேரும் அமைந்தார்கள். எகிப்திற்கு திரும்பிப்போவோம் அதுவே உத்தமம் என்றனர். இதைக்கேட்ட **தேவனுடைய மனிதர்களாகிய யோசுவாவும், காலேபும் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு கர்த்தருக்கு விரோதமாக மாத்திரம் கலகம் பண்ணாதிருங்கள். அந்த தேசத்து ஜனங்களுக்கு பயப்படவேண்டிய தில்லை. அவர்களைக் காத்த நிழல் அவர்களை விட்டுப்போய்விட்டது. கர்த்தர் நம்மோடே இருக்கிறார் என்றார்கள்.**

**தேவனுக்கான ஒரு பக்தி வைராக்கியம் தேவன் சார்பாக பேசுவது; தேவ திட்டத்தில் முழுமையான இணைவு இதனைக் காண்பிக்கும் படியாக ஒரு வெளியான அடையாளமாகவும், பொங்கி எழும்பிய உணர்வுகளின் செயலாயும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்தார்கள்.**

**தேவனுக்கான ஒரு பக்தி வைராக்கியம் தேவன் சார்பாக பேசுவது; தேவ திட்டத்தில் முழுமையான இணைவு** இதனைக் காண்பிக்கும்படியாக ஒரு வெளியான அடையாளமாகவும், பொங்கி எழும்பிய உணர்வுகளின் செயலாயும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்தார்கள்.

தீர்க்கன் யோவேலின் வாயிலாக ஆண்டவர் கூறும் செய்தியை நன்றாக புரிந்து கொள்ளுங்கள். இது இவை எல்லாவற்றையும் விட மேலானதும், உன்னதமானதுமான ஓர் அழைப்பாகும். **இருதயங்களைக் கிழியுங்கள் (Rend Your Heart) மெய்யான மனந்திரும்புதல் அது இருதய மாற்றமாகும்.** வேதாகமத்தில் நாம் அடிக்கடி வாசிக்கலாம் பெரிய தீர்க்கதரிசிகள் அனைவரும் கூடவே சிறிய தீர்க்கதரிசிகளும் அடிக்கடி ஒலிப்பது இருதய மாற்றம், மெய்யான மனந்திரும்புதல் அது இருதய மாற்றமாகும். யூதா, இஸ்ரவேல் தன்னிடம் திரும்பும்படி தேவன் மீண்டும் மீண்டும் அழைப்பதைப் பார்க்கலாம்.

## சத்திய வேதத்தில் மனிதனின் இருதயம்;

**தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர். சங்கீதம் 51:17**

இதைக் குறித்து தான் சொல்லுகிறார்; இதயத்தைக் கிழியுங்கள் என்பதாக. மெய்யான பாவ அறிக்கை தேவனை நோக்கி சுத்திகரிப்புக்காக கெஞ்சும். (சங்கீதம் 51:1-2,7)

- தேவ பரிசுத்தம் விளங்க துடிக்கும் (மெய்யான பாவ அறிக்கை) - சங்கீதம் 51:4
- சுத்த இருதயத்தை உருவாக்கும்படியான மன்றாட்டு — சங்கீதம் 51:10
- பரிசுத்த ஆவியை என்னை விட்டு எடுத்துவிடாதேயும் தேவனே என்ற கதறல் - சங்கீதம் 51:11
- இரட்சணியத்தின் (மீட்டெடுத்ததன்) சந்தோஷத்தை எனக்குத் தாரும் என்று அபயமிடுவது — சங்கீதம் 51:12

மெய்யான உன் இருதயம் தேவனுக்கு முன்பாக, இவ் அனுபவங்களை கண்டிருக்கிறன்றதா? இல்லாவிட்டால் உன் மனம் திரும்புதல் வெறும் வஸ்திரத்தைக் கிழித்தது போலவே? நீயாகவே இயேசுவை ஆண்டவர் என்று அறிந்து அறிக்கையிடுகிறாயா அல்லது வெறும் வெளியான குதுகலிப்பா? உன் ஆராதனையும், தேவனுக்கான சேவையையும் கிழிக்கப்பட்ட இருயதத்திலிருந்தா? அல்லது உணர்ச்சிகளின் ஆராதனையும் சேவையுமா?

**வாலிப பிராயத்தில் தேவன் உன்னில் நிகழ்த்த விரும்பும் இதய சத்திர சிகிச்சையை (நீயாகவே அதை செய்ய முன் வரவேண்டும்)** நிகழ்த்துவதற்கு கேட்டின் மகன் பிசாசானவன் அனுமதிக்கவும், விரும்பவும் மாட்டான். **தேவனை அறிந்தும் அவரை தேவன் என்று மகிமைப்படுத்தாமலும் ஸ்தோத்தரியாமலும் இருந்து தங்கள்** சிந்தனைகளினாலேயே **வீணரானார்கள்.**

### "உணர்வில்லாத அவர்கள் இருதயம் இருளடைந்தது"

> **"இருதயத்தை உணர்வற்ற நிலையை அடைய வைப்பதே சத்துருவின் தந்திரம். அதை அவன் தந்திரமாகவும், வேகமாகவும் இந் நூற்றாண்டில் விசேஷமாக வாலிபர்கள் மத்தியிலே செய்து வருகிறான்"**

**இருதயத்தை உணர்வற்ற நிலையை அடைய வைப்பதே சத்துருவின் தந்திரம். அதை அவன் தந்திரமாகவும், வேகமாகவும் இந் நூற்றாண்டில் விசேஷமாக வாலிபர்கள் மத்தியிலே செய்து வருகிறான்.** அதிலும்தேவனை அறிந்த பிள்ளைகள்மத்தியில் அதிலும் அதிகமாக உன்னுடன் எப்படி? **உன் வாலிப நாட்களில் உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும் கண்ணின் காட்சிகளிலும் நட, ஆனாலும் இவை எல்லாவற்றின் நிமித் தமும் தேவன் உன்னை நியாயத்திலே**

**கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி (பிரசங்கி 11:9)** எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமாய் இருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்? கிழிக்கப்படும் இதயமானது தடை செய்யும் பாவத்திரைச் சீலைகளைக் கிழித்து பரலோகத்தை நோக்கி வீறுநடை போட உன் வாலிபத்தை அர்ப்பணிப்பாயா? ஆண்டவர் கரத்தில்.

**பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்புவது (எசேக்கியேல் 11:11) இருதயம் கிழிக்கப்படுவதாகும்.**

இருதயம் வஞ்சனையுள்ளது. சகலவற்றைப் பார்க்கிலும் உன் இளமையைக் குறித்து ஒருவனும் அசட்டை பண்ணாதபடிக்கு எச்சரிக்கையாய் இரு. உன் நடக்கையிலும் கற்பிலும், அன்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு. தேவனிடமிருந்து பிரிக்கப்பட்ட இருதயம் அந்நபரைக் கடினமானவனாக(ளாக) மாற்றுகின்றது. இது குருட்டுத் தன்மையாகும். இதயத்தை கடினமாக்குவதென்பது ஒருவன் பிடிவாதமும் கல் மனமும் கொண்டிருக்கும்படியாக இருதயத்தை கொழுக்க வைப்பது, காதுகளை மூடிக்கொள்வது, கண்களை மூடிக்கொள்வதைக் குறிக்கும். இவை அனைத்திலிருந்தும் விடுதலைக்கான **ஒரே வழி கிறிஸ்துவிடம் வருவதாகும்.**

**இருதயம் உணர்ச்சிகளின் இருப்பிடம்:-** மனிதனுடைய எல்லா உணர்ச்சிகளும் இருதயம் சார்ந்தே கூறப்பட்டுள்ளது. வருத்தப்படுதல், மனமகிழ்ச்சி, நம்புதல், பொறாமையின் ஏக்கம், பகைமை, அன்பு, அதிர்ச்சியுறுவது, திகிலடைவது, சோர்வடைவது, தீய, நல்ல ஆசைகளின் இருப்பிடம்.

**இருதயம் அறிவின் இருப்பிடம்:-** சிந்திப்பதை தனக்குள் (இருதயத்திற்குள்) சொல்லிக் கொள்ளல், இருதயத்தில் மனிதன் திட்டங்கள் செய்கிறான். அறிவைத் தேடுகிறான்.

**இருதயம் சித்தம் மற்றும் ஒழுக்க வாழ்வின் இருப்பிடம்:-** தீய எண்ணங்கள் வெளிவரும், முரட்டுத்தனம் கொள்ளலாம், இருதயம் தேவனிடமிருந்து மாறிவிடலாம். கடின முரட்டுத்தனமான இருதயம் விருந்த சேதனம் செய்யப்படாமை, ஒருவன் தன் இருதயத்தை முழுவதுமாக நம்பி இருக்கலாம், ஏமாற்றப்படாலம், மிகவும் கெட்டுப்போனது, தீமை நிறைந்தது.

**பாவம் இருதயத்தைப் பாதிக்கின்றது. மட்டுமல்ல தேவனை முழு இருதயத்துடன் அன்புகூறவும், ஆராதிக்கவும் கீழ்ப்படியவும் விடாமல் தடுத்து வைக்கும்.** தூய்மையில்லாத இருதயமுடையவர்கள் இருமனம்

கொண்டவர்கள். தேவனில் நம்பிக்கை கொள்ளாமல் தங்கள் சொந்த சிந்தனைகளின் படியும் தீய உள்ளத்தின் பிடிவாதத்தின் படியுமே நடப்பார்கள் (நடந்தவர்கள்). உடைந்த உள்ளத்தோடு தேவனண்டை வா மகனே, மகளே! உன் இருதயத்தை எனக்குத் தா எனக்கு செவிசாய்ப்பாயாக. செவிசாய்த்து கீழ்ப்படிவாயாக. இதை வாசிக்கும் இந்த நிமிடம் உன் இருதயம் தேவனுக்கு முழுமையாக சொந்தமா? இல்லா விட்டால் இப்பொழுதே மனந்திரும்பு.

இயேசு; *பாவம் என்பது* **இருதயத்திலிருந்தே வெளிவருகின்றது என்பதை சுட்டிக்காட்டுகின்றார். இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும். இவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும் (மத்தேயு 15:19).**

இருதயம் சுத்தமாக்கப்படுவதை வேதம் நமக்கு மிகத் தெளிவாக காண்பிக்கிறது. முதலாவது பாத்திரத்தின் உட்புறத்தை சுத்தம் பண்ணும்படியாக. **கிழிக்கப்பட்ட இருதயம்/சுத்திகரிக்கப்பட்ட இருதயம் கொண்டவர்கள்.**

1. ***வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொள்வார்கள்.***
2. ***வார்த்தையினால் சந்தோஷமாய் வாழ்வார்கள்.***
3. ***இருதயத்தில் மகிழ்ச்சி பொங்க நடப்பார்கள் (தனக்கும் மற்றவர்களுக்கும்)***
4. ***தேவனுடைய நாமம் உயரவும், மகிமைப்படவும் வாழ்வார்கள்.***
5. ***பரியாசக்காரருடைய கூட்டத்தில் உட்காரமாட்டார்கள்.***
6. ***எச் சந்தர்ப்பத்திலும் கர்த்தரோடு இசைந்து இருப்பார்கள்.***

ஆண்டவர் உங்களிடம் கேட்பது எல்லாம் மெய்யாய் மனந்திரும்பி புதிதாக்கப்பட்ட இருதய விருத்தசேதனம் பெற்றவர்களாக தேவ அன்பு இருதயத்தில் ஊற்றப்பட்ட நம்பிக்கை நிறைந்த வாழ்வு வாழ. **ஆராதனைக்கு போவதுகூட உனக்கு கஸ்ரமாய் இருந்தால் நீ மெய்யாய் மனம்திரும்பவில்லை. ஆராதனை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது நீ இடையில் எழுந்து சென்றால் (ஒவ்வொரு கிழமையும்) நீ இரட்சிக்கப்படவே இல்லை.** தேவனுடைய இரத்தத்தினால் சம்பாதிக்கப்பட்ட சபையில் பரிசுத்த குலைச்சலை உண்டாக்கும் எந்த செயலையும் செய்யாதே. காரணம்; நீங்களே ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாய் இருக்கிறீர்கள். தேவ ஆவி உங்களில் வாசமாய் இருக்கிறார் என்று அறியீர்களா.

**கிழிக்கப்பட்ட இருதயங்களில் இருந்து மாத்திரமே தேவனுக்கு மகிமை உண்டாக்கும் வாழ்வு வாழ முடியும்.**

**போதகர் வேதநாயகம் சுமணன்.**

# இயேசு: காயப்பட்டார், நொறுக்கப்பட்டார்

தேவன் இந்த உலகத்தில் அன்பு கூர்ந்து. பாவம் செய்து தேவ தொடர்பை இழந்து போன மனிதனை மறுபடியுமாக தன்னோடு இணைத்துக் கொள்வதற்கு ஏக்கம் கொண்டு மனுவுரு எடுத்து மனுஷ சாயாலானார். ***பிதாவுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி மனுஷர் சாயலானார்.*** மரண பரியந்தமும். சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத் தாமே தாழ்த்தினார்.



**இயேசு உனக்காக காயப்பட்டார், நொறுக்கப்பட்டார், சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது.**

தவறான வழியில் ஒவ்வொரு மனிதனும் தன் இஷ்டப்படியும். தன் சுய இச்சையின் படியும் போனதைப் பார்த்து வேதனையுற்ற ஆண்டவர், எல்லோருடைய பாவ, ஆக்கிரம தண்டனையையும் இயேசு கிறிஸ்து சுமந்து கல்வாரி சிலுவையில் மரித்து அடக்கம் பண்ணப்பட்டார். மூன்றாம் நாள் உயிரோடு எழுந்த ஆண்டவர் இயேசு ஜீவிக்கிறவராக இன்றும் வாழ்கின்றார்.

***தன்னோடு கூட இருந்து உணவுண்டு, பிரயாணப்பட்டு அற்புதங்களைக் கண் ஊடாக கண்டு களித்த அப்போஸ்தலர்களே கலக்கமுற்று, பயமுற்று, பூட்டப்பட்ட அறையில் இருந்த போது இயேசு அவர்கள் நடுவே வந்து உங்களுக்கு சமாதானம் என்றார்.*** தோமாவை நோக்கி: **நீ உன் விரல்களை நீட்டி, என் காயங்களைப்பார்; உன் கையை நீட்டி என் விலாவிலே போடு. அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்று இயேசு கூறினார்.**

உன்னிடத்திலும். அவர் எதிர்பார்ப்பது தான் பட்ட காயங்களும். நெருக்கதலும் உன்னுடைய பாவத்திற்காக என்பதை ஏற்று தன் மீது விசுவாசம் உடையவனாக வாழ அழைக்கின்றார்.





## பெண்கள் பக்கம்

**சங்கீதம் 62:5 என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு; நான் நம்புகிறது அவராலே வரும்.**

நீங்கள் தேவனுக்கு முன்பாக அமர்ந்திருப்பது என்றால் அவருக்கு முன்பாக காத்திருத்தல். தேவன் எங்களுடைய வாழ்க்கையில் ஏதாவது செய்ய முயலும் போது தான் எங்களைப் பார்த்து; ***அமர்ந்திரு, காத்திரு, ஒன்றும் செய்யாதே*** என்று கூறுகின்றார். உன் உருவச் சித்திரம் வரையும் போது நீ எவ்வளவு அசைவின்றி சித்திரம் வரைபவருக்கு முன் அமர்ந்திருக்க வேண்டுமோ. அவ்வாறு தான் நீ தேவனுக்கு முன்பாக அமர்ந்திருக்க வேண்டும்.

**சங்கீதம் 46:10a நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்;**

இவ் ஆண்டு நீ விண்ணப்பத்தோடு இருப்பாயானால், அன்னாள் போல **1சாமுவேல் 1:10 அவள் போய், மனங்கசந்து, மிகவும் அழுது, கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி**, இன்று உங்கள் தேவை என்ன? வியாதி, கடன், பிள்ளைகளின் திருமணமா, வேலை பிரச்சினையா, வழிகள் அடைகப்பட்டிருக்கின்றதா? **1சாமுவேல் 1:5b கர்த்தரோ அவள் கர்ப்பத்தை அடைத்திருந்தார்.** இன்று உங்களுடைய வழிகள் அடைபட்டிருக்கலாம்; **தேவன் கூறுவது அமர்ந்திரு.**



**1சாமுவேல் 1:16^b இந்நேரம் மட்டும் விண்ணப்பம்பண்ணினேன்.** ஏலி அவளைச் சந்திக்கும் மட்டும் விண்ணப்பம் பண்ணினாள். 17ம் வசனத்தில் உன் விண்ணப்பத்தின்படி உனக்கு கட்டளையிடு வாராக என்றான். கட்டளை பிறந்தவுடன் 18ம் வசனத்தில் அவள் துக்கமுகமாயிருக்கவில்லை.

இன்று துக்கமுகமாய் இருக்கின்றாயா? அன்னாள் போல உன் துக்க முகத்தை மாற்று. **1சாமுவேல் 1:19^b கர்த்தர் அவளை நினைத்தருளினார்**. கர்த்தருக்காய் காத்திருக்கும் போது அவர் நிச்சயமாய் தன்னுடைய வேளையின் போது உன் விண்ணப்பத்தை நினைவுகூருவார். 1சாமுவேல் 1:26 வசனத்தில்: ஏலிக்கு முன்பாக தான் விண்ணப்பித்த இடத்தை குறிப்பிட்டு தன்னை அறிமுகப் படுத்துகின்றாள்.

**1சாமுவேல் 1:27 இந்தப் பிள்ளைக்காக விண்ணப்பம்பண்ணினேன்; நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப்பத்தின்படி எனக்குக் கட்டளையிட்டார்.** அன்னாள் குறிப்பிட்ட பிள்ளைக்காக 10 மாதங்கள் காத்திருக்க வேண்டி இருந்தது. நீயும் சோர்ந்து போகாமல் அமர்ந்து காத்திரு. **1சாமுவேல் 2:26 சாமுவேல் என்னும் பிள்ளையாண்டானோ, பெரியவனாக வளர்ந்து, கர்த்தருக்கும் மனுஷருக்கும் பிரியமாக நடந்துகொண்டான்.**

கர்த்தருக்கு முன்பாக அமர்ந்து காத்திருக்கும் போது உன் விண்ணப்பத்தின் பதில் கர்த்தருக்கும் மனுஷருக்கும் பிரியமாய் இருக்கும்.

தேவனுக்காக காத்திருக்க ஆர்ப்பட்டம் தேவையில்லை, அமைதியான மனநிலை வேண்டும். தேவ சமூகத்தில் காத்திருக்கும் ஆத்துமாவுக்கு பாரங்களை இறக்கி வைக்க தேவபாதமுண்டு.

**நீதிமொழிகள் 13:12 நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும்; விரும்பினது வரும்போதோ ஜீவவிருட்சம்போல் இருக்கும்.**

**திருமதி. J.பிலிப்**

# ஆராதிக்கும் இருதயம் கொடுக்கும் இருதயம்




சென்ற இதழின் தொடர்ச்சி...

**01. தப்பானவைகளை விட்டு விலகு – 11தீமோத்தேயு 3:1–9**

*11தீமோத்தேயு 3:5 இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு.* **ஓர் உண்மையுள்ள விசுவாசி இப் பகுதியில் குறிக்கப் பட்டுள்ள மக்களோடு இசைந்து நடக்கக் கூடாது.** இவர்கள் சமயம் என்ற வேடத்திற்குள் நடமாடுவார்கள். **அதாவது தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதன் பெலனை மறுதலிக்கிறவர்கள்.**

**இவர்களைப் பற்றி மூன்று உண்மைகளை பவுல் கூறுகின்றான்.**

01. இவர்களது குணாதிசயம் – 11தீமோத்தேயு 3:2–5

இங்கு பவுல் 18 விதமான வித்தியாசமான குணாதிசயங் களை விளக்குகின்றான். **இதிலும் அதிகம் குறிப்பிட்டிருக்கலாம்.** இங்கு பிரியத்தை பற்றி அழுத்தி சொல்லப்படுகின்றது.

தற்பிரியர் - தங்களையே நேசிக்கிறவர்கள்

பணப்பிரியர் - இவர்கள் தேவப்பிரியர் அல்ல; உல்லாசப்பிரியர்.

**நாம் தேவனை மேலாக அன்பு செய்ய வேண்டும் என வேதம் போதிக்கின்றது.** அத்துடன் நம்மைப் போல எம் அயலானையும் நேசிக்க வேண்டும். **நாம் நம்மில் அதிகம் அன்பு கூர்ந்தால் தேவனிலும் அன்பு கூரமாட் டோம்; அயலானிலும் அன்பு கூரமாட்டோம். இவ் உலகில் தேவன் இருக்கின்றார். மக்கள் இருக்கின்றார்கள். பொருட்களும் இருக்கின்றன.** நாம் தேவனை ஆராதித்து, மக்களை நேசித்து, பொருட்களை பாவிக்க வேண்டும்.

**ஆனால் நாம் நம்மையே ஆராதிக்க முற்பட்டால், தேவனை அசட்டை செய்து, பொருட்களை நேசிக்க ஆரம்பித்து,**

மக்களை பாவிக்கின்றவர்களாக மாறிவிடுவோம். இதுவே பரிதாபகரமான வாழ்க்கைக்கான சூத்திரம் ஆகும். பொருட்களின் மீது உலகளாவிய விதத்தில் காணப்படும் அடங்காத ஆசை, மக்களில் இருதயம் தேவனை விட்டுவிலகிட்டது என்பதற்கு சான்று ஆகும். ஒருவன் தன்னையே நேசித்து தன்னையே ஆராதித்தால் உண்டாகும் விளைவு பெருமை.

"நீங்கள் தேவர்களைப் போல் இருப்பீர்கள்" என்பதே பிசாசு ஏவாளுக்கு கொடுத்தது... ஆதியாகமம் 3:5. இதன் விளைவு ஜனங்கள் தேவனுடைய சத்தியத்தைப் பொய்யாக மாற்றி தேவனை ஆராதித்து சேவிப்பதற்கு பதில் சிருஷ்டியை தொழுது சேவித்தார்கள் ரோமர் 1:25. மனிதனே தன் சொந்த தேவனாக ஆகிவிட்டான். சிருஷ்டி இப்போது சிருஷ்டிகர். இப்போது அவன் வீம்புக்காரன், அகந்தையுள்ளவன், தூஷிக்கிறவன்.

அடுத்து தாய் தகப்பன்மாருக்கு கீழ்ப்படியாதவர்கள். இது எதைக் காண்பிக்கின்றது. இந்தச் சீரழிவு குடும்பத்திற்குள்ளும் வந்து எட்டிவிட்டது. பிள்ளைகள் நன்றியறிதல் அற்றவர்களாக பெற்றோர் செய்வதை பாராட்டாதவர்களாக இருக்கிறவர்கள். பெற்றோரைக் குறித்ததான மனப்பாங்கில் பரிசுத்தம் இல்லாமல் இருக்கிறார்கள். தாய் தந்தையை கனம்பண்ணு என்பது கற்பிக்கப்படுவதும் இல்லை, மதிக்கப்படுவதும் இல்லை. சுபாவ அன்பு என்பது குடும்ப அன்பு. குடும்பம் இன்று தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கிறது. புருஷன், ஸ்திரி, குடும்பம் இவர்களுக்குள் தேவன் கொடுத்த சுபாவ அன்புக்குப் பதிலாக வேறுவிதமான அன்பு காணப்படுகின்றது. இதை தேவன் கண்டனம் பண்ணுகின்றார் ரோமர் 1:18-27, 1கொரிந்தியர் 6:9-10.

இது எல்லாம் குழப்பம். இதை தேவன் நியாயம் தீர்ப்பார் ரோமர் 1:28-32. குடும்பத்தில் மாத்திரம் அல்ல, சமூகத்திலும், வியாபார உலகிலும் இக் கொடிய காலங்களின் அறிகுறி தென்படுகிறது. இணங்காதவர்கள் - இது ஜனங்கள் ஒத்துக்கொள்ள மறுப்பார்கள். என்பதையே விபரிக்கிறது. இவர்கள் ஒப்புக்கொடாதவர்களும், ஒப்புரவாக மறுப்பவர்களும், தங்கள் சுயவழியை கொண்டிருப்போரும் ஆகும். தங்கள் நிலையைத் தக்கவைக்க அவர்கள் அவதூறு செய்பவர்களாக மாறுவார்கள். தவறான முறையில் குற்றம் சாட்டுவோர். மற்றோர் நன்மதிப்பைக் கெடுக்கப்பார்ப்பார்கள். இச்சையடக்கம் இல்லாதவர்கள், சுயகட்டுப்பாடு அற்றவர்கள்.

இன்றைய சமூகத்தின் கொள்கை; உன் சொந்தக் காரியத்தைச் செய்து அதில் சந்தோசப்படு. துயரமான காரியம் என்னவெனில் இப்படிப்பட்ட பெற்றோருக்குப் பிறந்த பிள்ளைகள் வாழ்க்கையை அனுபவிப்பதில்லை. அவர்கள் அங்கவீனராக அல்லது வலது குறைந்தவர்களாக காணப்படுகிறார்கள். இதற்கு காரணம்: மது, போதைவஸ்து. இச்சையடக்கம் அற்றதன்மை பல்வேறு வழிகளில்

வெளிப்படுகிறது. **கொடுமையுள்ளவர்களையும் என்பது; பழக்குவிக்கப் படாத, காட்டுமிராண்டித்தனமான, மிருகத்தனமான, முரட்டுத்தனமான, அறிவற்ற** இவர்கள் தாங்கள் சொந்த வழியில் நடக்க முடியாவிட்டால் பொடூரமான மிருகத்தைப் போல் ஆகிவிடுவார்கள்.

**நல்லதை கனம் பண்ணுவதற்கு பதிலாக, நல்லதை அவமதித்து, தீங்கானதை கனம்பண்ணுவார்கள்.** இன்று சமுதாயத்தில் நல்லதும் தீயதும் திரிவுபடுத்துப்படுகிறது. **இப்படிப்பட்டோருக்கு ஐயோ! என ஏசாயா கதறுகின்றான் ஏசாயா 5:20.** அடுத்து துரோகிகள் *11தீமோத்தேயு 3:4.* இவர்கள் மக்களைக் காட்டிக்கொடுப்பவர் களும் நம்பமுடியாதவர்களும் ஆகும்.

1. துரோகம் என்பது காட்டிக் கொடுப்பது
2. துரோகம் என்பது முதுகில் குத்துவது
3. துரோகம் என்பது நன்றி மறப்பது
4. துரோகம் என்பது ஆசை காட்டி மோசம் செய்வது
5. துரோகம் என்பது போலிப்பாசம் காட்டுவது
6. துரோகம் என்பது பழசை எல்லாம் மறந்து விடுவது
7. துரோகம் என்பது உறவாடிக் கெடுப்பது
8. துரோகம் என்பது முகத்திற்கு முன்னே சிரிப்பது; முதுகிற்கு பின்னே முறைப்பது
9. துரோகம் என்பது வாங்கின கடன் இல்லை எனச் சொல்வது
10. துரோகம் என்பது கையை நனைத்த வீட்டிற்கு கயமை புரிவது
11. துரோகம் என்பது ஏறி வந்த ஏணியை எட்டி உதைப்பது
12. துரோகம் என்பது கொடுத்த வாக்குறுதியை மீறுவது

**துணிகரமுள்ளவர்கள்** :- கண்மூடித்தனமான, முரட்டுத்தனமுள்ள, பொருட்படுத்தாதவர்கள்.

**இறுமாப்புள்ளவர்கள்** :- பொம்மிப்போய் இருப்போர், தற்செருக்குள்ள நிலை.

**தேவப்பிரியராய் இராமல் சுகபோகப்பிரியர்:-** என்பது சுகபோகமா, தேவனா என்று தெரிவு செய்வதில்லை. தெரிவானது தேவனை நேசிப்பதா? சுகபோகத்தை நேசிப்பதா என்பதே. **நாம் தேவனை நேசித்தால் வாழ்வின் நிறைவை அனுபவிப்போம்.**

ஆனால் பாவத்தின் சுகம் சொற்ப நேரத்திற்கு மட்டுமே. **பவுல் இங்கே விபரித்தவர்கள் தாங்கள் தேவ பக்தி உள்ளவர்கள் என எண்ணுவார்கள்.** ஆனால் உண்மையில் இவர்கள் தேவ பக்தியின் வேஷத்தை தரித்து இருப்பவர்களே. **இவர்கள் கொண்டிருப்பது ஒரு வெளித்தோற்றமே ஒழிய உண்மையான கிறிஸ்தவ விசுவாசம் இல்லை.** இவர்கள் தங்கள் வாழ்க்கையில் தேவ பெலனை ருசிபார்க்காதவர்கள்.

02. இவர்களது மார்க்கத் தலைவர்கள் - 11தீமோத்தேயு 3:8-9

மோசேக்கும் எகிப்திய மந்திரவாதிகளுக்கும் இடையில் நடைபெறும் சம்பவத்தக் காணலாம். **பாரம்பரியமானது. யந்நேயும் யம்பிரேயும் எகிப்திய மந்திரவாதிகள் எனக் கூறுகிறது. பிசாசு நடிப்பவன், பாசாங்கு பண்ணுபவன்.** தேவன் நடப்பிப்பதற்கு பதிலாக போலியை வைத்து தேவனை எதிர்த்து மக்களை ஏமாற்றுபவன். உதாரணம்: கள்ளக்காசு.

**கடைசிக் காலத்தில் இருக்கும் மார்க்கத் தலைவர்களிடம் போலியான விசுவாசம் காணப்படும்.** இவர்களது நோக்கம்: தேவ வார்த்தையின் உண்மையை எதிர்க்க பொய்களைக் கூறுவது. **இவர்கள் வேத வசனத்தின் அதிகாரத்தை மறுதலித்து, அதற்குப் பதிலாக மனித ஞானத்தையும், தத்துவங்களையும் முன்வைப்பார்கள்.** நவீனமுள்ளவர்களாகத் தங்களைக் காண்பிக்க இவர்கள் பாவத்தின் நிஜத் தன்மையையும் மக்களின் இரட்சிப்பின் தேவையையும் மறுதலிப்பவர்கள்.

**அன்று இவர்களுடைய மதிகேடு வெளிப்பட்டது. அதே போல் இந்த போலியானவர்களுடைய சுயதன்மையும் வெளிப்படும்.**

### 02. உண்மையுள்ளோரைப் பின்பற்ற வேண்டும் – 11தீமோத்தேயு 3:10–12

தப்பான தலைவர்கள் பக்கம் இருந்து பவுல் திரும்பி தான் ஓர் உண்மையான ஊழியன் என தீமோத்தேயு நினைவுபடுத்துகின்றான். **இந்தக் கஷ்டமான காலத்தில் நாம் சரியான ஆவிக்குரிய தலைவர்களைப் பின்பற்றுவது மிகவும் முக்கியம்.** இவர்களது குண இயல்புகள் எப்படி இருக்கும்.

**தொடரும்...**

*(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இஸ்பஹான்)*







கவலைப்படாதிருங்கள் என்றும், கவலைப் படுவதினால் உங்களால் எதையும் மாற்றிவிட முடியாது என்று இயேசு கிறிஸ்து கூறியுள்ளார்.

ஆனால் கவலைப்படாமல் இருப்பது என்பது நம்முடைய கையிலா இருக்கிறது? **கடன்பட்டு விட்ட பிறகு கவலைப்படாமல் இருக்க முடியுமா? வஞ்சகங்கள் வலைவிரிப்பது தெரிந்த பிறகும் பதட்டப்படாமல் இருக்க முடியுமா?**

**தேவைகள் சந்திக்கப்படுவதற்காக போராட நேரிடும் போது அமைதியாய் அமர்ந்திட முடியுமா? பிள்ளைகளுக்கு செய்ய கடமைகள் செய்ய முடியாத போது வருந்தாமல் இருக்க முடியுமா? நன்றாக நடந்த வியாபாரம் தொய்வடையத் தொடங்கினால் சோர்வு காணாமல் இருக்க முடியுமா?**

இவைகளைச் சந்திக்கும் போது கவலைப்படாமல் இருக்க முடியும் என்பது கடினமான ஓர் அனுபவமே ஆகும். மருத்துவரிடம நோயாளி வந்தால் டாக்டர் பரி சோதித்துவிட்டு பயப்படாதேயுங்கள எல்லாம் சரியாகிவிடும என்றதன பின் அவர் கொடுக்கும் சிகிச்சையை பின்பற்றாமல் இருக்க முடியாது.


*இதனால் தான் பேதுரு சொல் கிறார்: கர்த்தரின் மேல் கவலைகளை வைத்துவிடுங்கள் என்பதாகக் கூறி அவர்களை நடத்த முயல்கின்றார். இயேசுவும் கூட இவ்விடயத்தில் வருத்தப்பட்டு பாரம்சுமப்பவரே என் ஓர் மகத்தான அழைப்பைக் கொடுக்கின்றார்.*

நமது பாரங்களை அவர் மீது வைக்க முன் **நமது பாவங்களை அவர் சிலுவையின் கீழ் வைப்போமானால்** அங்கே இருந்து புறப்படும் மன்னிப்பு ஏற்றுக் கொள்ளப்படல், புத்திரசுவிகாரம், ஆசீ வாத நிலைகள், தெய்வீக சுகங்கள், வரங்கள், வாழ்வாதார, ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் எல்லாவற்றையும் ஒரே இரத்தத்தின் கீழ் ஒரே தேவனின வல்லமையின் கீழ் பெற்றுக் கொள்ள முடியும்.

**எனவே பாரங்கள் சுமக்கும் அருமை நண்பரே! உன் பாவங்களை இயேசுவிடம் வைத்துப்பார். உன் பாரங்களை அவர் எடுத்துக் கொண்டு பதில்களை உனக்குத் தந்திடுவார்.**

"தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக"

# குறுக்கெழுத்துப்போட்டி – 54




குறிப்பு:- 12வயதுக்கு மேற்பட்டவர்களே தயவு செய்து குறுக்கெழுத்துப் போட்டியை செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றோம். - நன்றி

## இடமிருந்து வலமாக

01. தான் செய்த தூக்குமரத்தில் தானே தொங்கியவன்
04. இயேசுவின் சீஷர்களில் ஒருவன் இந்த இனத்தைச் சேர்ந்தவன்
06. இவன் நசரேய பொருத்தனைக்கு உட்பட்டவன்
10. ஆபிரகாமின் வீட்டு விசாரணைக்காரன் இவ்வூரான்
11. ஒரு கல்லை நிறுத்தி அதற்கு எபெனேசர் என்று பேரிட்டவன்



## வலமிருந்து இடமாக

03. இந்த ராஜா தன் முகத்தை சுவர்ப்புறமாகத் திருப்பி அழுதான்
05. இவர்கள் யோனத்தானை வெட்டிப்போட்டார்கள்
07. கர்த்தர் சொல்லியிருந்த வார்த்தையின்படியே இவன் இரத்தத்தை நாய்கள் நக்கினது
08. இவள் தாவீதின் நடனத்தைக் கண்டு இருதயத்தில் அவமதித்தாள்
13. யோசியாவின் நான்காவது குமரான்



## மேலிருந்து கீழாக

01. சவுல் கொல்லாமல் தப்புவித்த ஒரு ராஜா
02. சிமியோன் புத்திரருக்கு கிடைத்த பட்டணங்களில் ஒன்று
03. மனாசேயின் தாய்
05. இவன் பீறுகிற ஓநாய் என யாக்கோபு கூறினான்


## கீழிருந்து மேலாக

09. மீஷாவேலின் மறுபெயர்
11. மெல்கிசேதேக்கு அரசாண்ட இடம்
12. உம்முடைய நீதி நித்திய நீதி, உம்முடைய .................. சத்தியம்
13. தாவீதின் மூன்று பராக்கிரமசாலிகளில் ஒருவன்

# சந்தோஷம் இல்லை!

## வேதப்பகுதி: பிலிப்பியர் 4:4–7

ஆனந்த்குமார் வீட்டில் யாருக்குமே சந்தோஷம் இல்லை. எப்போதும் அவர்கள் சோகமாகவே காணப்படுவார்கள். ஏனென்றால் ஆனந்த்குமாரின் பெயரில்தான் ஆனந்தம் இருக்கிறது. அவனுடைய இதயத்தில் அது இல்லை. **அவன் எப்பொழுதும் ஏதாவது ஒரு காரணத்திற்காக அழுது கொண்டேயிருப்பான். ஏதாவது ஒன்றை வாங்கிக் கொடுக்கவில்லை என்றால் அதற்காக அழுவான். எதையாவது வாங்கிக் கொடுத்தால் அது நன்றாகயில்லை என்று அழுவான். பள்ளிக்கூடம் போனால் டீச்சர் திட்டினார் என்று அழுவான். வீட்டில் வந்தால் அம்மா திட்டினார் என்று அழுவான்.** எனவே அங்கே யாரும் சந்தோஷமாயிருக்க முடியவில்லை.



ஆம் நீ சந்தோஷமாயில்லையென்றால் உன்னுடைய வீட்டில் யாரும் சந்தோஷமாயிருக்க முடியாது.

சந்தோஷமாயிருப்பது எப்படி? **இயேசு கிறிஸ்துவோடு உனக்கு நல்ல உறவு வேண்டும். அவருடைய வார்த்தைகளை உனக்குள் சிந்திக்க வேண்டும். அவரோடு நீ (ஜெபத்தில்) பேச வேண்டும். அவருடைய வார்த்தைகளை நீ கேட்க வேண்டும். அப்பொழுது நீ சந்தோஷமாயிருப்பாய்.**

**சிந்தனைக்கு: கிறிஸ்துவோடு நாம் இருந்தால் கிறிஸ்துவின் சந்தோஷம் நம்மோடிருக்கும்.**

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! – டிசம்பர் 03



# அருட்பணியாளர் சரிதை



## ஜாண் பன்யன்

1628 – 1688

### தாழ்வு வாழ்வைத் தரும்

12 ஆண்டுகள் சிறைத் தண்டனை! செய்த குற்றம் என்ன? இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை மக்களுக்கு போதித்ததே பெருங்குற்றம்.

இங்கிலாந்து அரசன் 2ம் சார்லஸ் 1660ஆம் ஆண்டு ஜாண் பன்யனை சிறையில் அடைத்தான். பரிசுத்த வேதாகமமும், இரத்த சாட்சிகளின் புத்தகமும் அப்பொழுது ஜாண் பன்யனின் கைகளில் இருந்தன.

**சிறைச்சாலை சிங்கார மாளிகையானது. 12 வருடங்களையும் பக்குவாக பயன்படுத்தினார் பன்யன். உலகத்தைத் திசை திருப்பும் உன்னத காவியமான "மோட்ச பிரயாணம்" என்ற காவிய நூலைப் படைத்தார்.**

பரிசுத்த வேதாகமத்திற்கு அடுத்தபடியாக அதிக மொழிகளில் பிரசுரிக்கப்பட்டு அநேகரால் படித்துப் பயன்பெறும் நூலாக அது திகழ காரணமானார். கிறிஸ்துவின் அடியார்க்குப் பாடுகள் என்பது பரிசுகள் தானே?

சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின் மீண்டும் நற்செய்திப் பணியினைத் தொடர்ந்தார். மக்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு இரட்சிப்பைப் பெற்றனர். தனது பிரசங்கத்தால் **"அத்தியட்சர் பன்யன்"** என்ற பட்டத்தைப் பெற்றார்.

ஏழைக் குடும்பத்தில் பிறந்து நாத்திகனாக தன் வாழ்வைக் கழித்து, துன்மார்க்கமாய் நடந்த ஜாண் பன்யனை

தேர்ந்தெடுத்த ஆண்டவர், உன்னையும் கொண்டு பெரிய காரியங்களைச் செய்யக்கூடுமல்லவா?

**தகரத் தொழில் செய்த ஜான் பன்யன் தங்கமாக மாறி ஜொலித்தார். தரணி போற்றும் தலைகனானார். "மோட்சப் பிரயாணம்" என்ற அவர் எழுதிய நூல் அனேகருடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஆதாரமாய் அமைந்தது.** மாபெரும் ஊழியர்களும், மிஷனெரிகளும், தோன்றுவதற்கு இந் நூல் காரணமாக அமைந்தது. ஆண்டவரின் திட்டத்தை தன் வாழ்நாளில் செயல்படுத்திய ஜான் பன்யன், ஆயிரமாயிரம் மக்கள் ஆண்டவரின் ராஜ்யத்திற்குள் செல்ல வழிகாட்டியாக அமைந்தார்.

**அன்பரே! உங்களைக் கொண்டும் ஆண்டவர் அரிய காரியங்களைச் செய்ய அர்ப்பணிப்பீரா? எழுந்து செயல்படும் காலம் இதுவல்லவா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: ஏழைகளுக்குத் தன் பொருளைக் கொடுக்கிறவன் அதைவிடவும் அதிகம் பெறுவான் — ஜான் பன்யன்.**

நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஆகஸ்ட் 31

## பிஷப் ஹீப்பர்

## 1495 – 1555



## என்ன வந்தாலும்....

**"கர்த்தராகிய என் இயேசு கிறிஸ்துவே என் மேல் கிருபையாயிரும். கர்த்தராகிய என் இயேசு கிறிஸ்துவே என் மேல் கிருபையாயிரும். என் ஆவியை ஏற்றுக் கொள்ளும்"**

இவை பேராயர் ஹீப்பரின் கடைசி வார்த்தைகள்.

**16ஆம் நூற்றாண்டு அது. இயேசு கிறிஸ்துவை பின்பற்றிய தினிமித்தம், பலர் சிறையிலடைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டனர். ஆயினும் அவர்கள் விசுவாசம் அநேகமாயிரம் பேரை கிறிஸ்துவுக்குள் வளரச் செய்தது.**

உண்மைக் கிறிஸ்தவர்கள் உயிரைக் கொடுத்தார்கள். பெயர் கிறிஸ்தவர்களை அது உயிரடையச் செய்தது. ஆவிக்குரிய வாழ்வில் தளர்ந்து போன, விழுந்து போன பலருடைய ஜீவியம் மீண்டும்

தழைத்தோங்க இரத்தசாட்சிகளின் மரணம் அவர்களை உந்தித் தள்ளியது.

ஜான் ஹீப்பர் ஒரு பேராயர். போப்பின் தவறான கொள்கை களுக்குத் தன் செவியை சாய்க்காமல், வேதத்தின் சத்தியத்தை தன் வாழ்க்கையின் ஆதாரமாகக் கொண் வாழ்க்கை நடத்தினார். இவர் போப்பின் ஆதிக்கத்தை எதிர்த்ததால் குற்றவாளி என தீர்ப்பிடப்பட்டு, சிரச்சேதத்திற்கு நியமிக்கப்பட்டார்.

அது ஒரு கொடூரமான நாள். ஹீப்பர் தன் உடலை இயேசுவின் நாம மகிமைக்காக சுட்டெரிக்கப்படுவதற்கு கொடுத்த நாள். சுமார் காலை 9 மணி வேளை. பட்டயங்களையும், ஈட்டிகளையும் சுமந்து கொண்டு, ஏராளமான சேவர்கள் பின்தொடர, ஹீப்பரை பிடித்துக் கொண்டு வந்தனர். குருமார்கள் பலர் வேடிக்கை பார்த்தனர்.

ஹீப்பர் முழங்கால்களை முடக்கி, விண்ணகத் தந்தையோடு, மண்ணிலிருந்து வேண்டுதல் செய்தார். ஜெபித்து முடிந்ததும், தன் மேலங்கியைக் கழற்றி, தீ மூட்டும் இடத்திற்கு நடந்து சென்றார். கட்டை ஈரமாக இருந்தபடியினால் அது எளிதில் பற்றவில்லை. கடைசியில் தீப்பற்றி அவர் அருகில் வரும் சமயத்தில், அத் தீயின் நடுவே **"ஆண்டவரே என்னை ஏற்றுக் கொள்ளும்"** என்று அவர் கரங்களில் தன் ஆவியை ஒப்புவித்தார்.

**அன்பரே! கிறிஸ்துவை மட்டுமே சேவிப்பதற்கு நீங்கள் ஆயத்தமா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: தேவன் என்னை அழைத்திருப்பதால் இந்த இடத்திலேயே என் ஆடுகளுடன் ஜீவிக்கவும், மரிக்கவும் ஆயத்தமாக இருக்கிறேன். — ஹீப்பர்**

*நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" செப்டெம்பர் 1*

# வினாவிடை - 55
# சரியான பதில்கள்

*01. பிலேயாம் - எண்ணாகமம் 24:17*
*02. யோசபாத் - 11நாளாகமம் 20:3*
*03. ஏசாயா - ஏசாயா 13:10*
*04. அப்போஸ்தலனாகிய யூதா - யூதா 13*
*05. தாவீது - 1நாளாகமம் 29:5*
*06. யோபு 38:32*
*07. யோவேல் - யோவேல் 2:10*
*08. எஸ்றா - எஸ்றா 8:21*
*09. லூக்கா 21:25*
*10. சங்கீதம் 69:10*



# ஆழவரி

## முத்துக்கள்

காலம் பதில் சொல்லும்
என்பது
கர்த்தரின் திட்டத்திலே தான்

வாழவழி சமைப்பது
தேவனின்
சத்திய வேதமே

மாம்சீக ஊழியத்தின்
பின்னால்
மாய்மாலக் கரங்கள் உண்டு

அர்ப்பணிப்பின் ஆசை
கீழ்ப்படிவின்
விருப்பத்திலேயே அடங்குகிறது

*சாவுகளை நிறுத்த*
*சந்திகளை ஜெபகளமாக்கும்*
*ஜெபவீரர் தேவை*

பார்வை எல்லாம்
நீரே
என்பது அன்பின் பிரமாணம்

எதுவரைக்கும் என்று
புலம்பும் மனங்கள்
கல்வாரியில் இளைப்பாறலாம்

மனித மனக்கால்வாயில
பொங்கி வருவது
கண்ணீர்

பரிசுத்தத்தை அழிக்கும்
படையணி
பெருமைப்படையணி

*வாழ்வுக்கு ஓர்*
*முற்றுப்புள்ளி*
*மரணம்*

# குறுக்கெழுத்துப் போட்டி – 53
## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**
03. சத்தியமும்
04. பேலிக்ஸ்
07. ஏதேனை
13. பவுல்
14. வெட்டுக்கிளிகளின்

**மேலிருந்து கீழாக**
01. யேசபேல்
02. எர்மோனை
06. தேமா
09. விதை
12. கீகோன்

**வலமிருந்து இடமாக**
02. எப்பத்தா
05. மோவாப்
08. தானியேல்
10. லேவியர்



**கீழிருந்து மேலாக**
11. ஆகார்
14. வெல்லு
15. கில்காலிலே
16. கர்மேல்



# வினா விடை – 56

01. "ஆகோர் பள்ளத்தாக்கு" என்றால் என்ன?

02. கல்லறையண்டையில் சத்தமிட்டு அழுத புருஷன் யார்?

03. "ஆபேல் மிஸ்ராயீம்" என்றால் என்ன?

04. ராஜாவின் பாதங்களில் விழுந்து அழுத பெண் யார்?

05. சுவிசேஷத்தினிமித்தம் துன்பத்தை அனுபவிக்கிறேன் என்றது யார்?

06. "காபூல் நாடு" என்றால் என்ன?

07. கல்லறையண்டை நின்று அழுத ஸ்திரி யார்?

08. அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன் யார்?

09. "அசைகிற இலையின் சத்தமும் அவர்களை ஓட்டும்" அவர்கள் யார்?

10. பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கும்படி நாம் தரித்துக் கொள்ள பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிற தேவனுடைய ஆறு சர்வாயுத வர்க்கங்கள் எவை?

# வினா விடை - 55
## சரியான விடை எழுதியவர்கள்

01. ப.நேருதி, மீசாலை
02. ஆ.வசந்தகுமார், பாண்டவெட்டை
03. வ.ஜெயாழினி, பாண்டவெட்டை
04. வ.குவாழினி, பாண்டவெட்டை
05. வ.றோசாமலர், பாண்டவெட்டை
06. எஸ்.மாக்கிறட், மீசாலை
07. பா.கோமதி, காரைநகர்
08. அ.சுதர்சினி, வேரவில்
09. வ.ஜோகனன், பாண்டவெட்டை
10. வ.தயாழினி, பாண்டவெட்டை
11. செ.எமிமாள், பாண்டவெட்டை
12. சி.ரதீஸ்வரி, பாண்டவெட்டை
13. நா.சிவபாக்கியம், காரைநகர்
14. பா.வதனி, காரைநகர்
15. பா.மோகனதாஸ், காரைநகர்
16. பா.தர்சினி, காரைநகர்
17. அ.எஸ்தர், காரைநகர்
18. அ.கம்சிகா, காரைநகர்
19. நா.கிறிஸ்தீனா, காரைநகர்
20. செ.நகுலா, பாண்டவெட்டை
21. அ.கிருசாந்தன், காரைநகர்
22. அ.துர்க்கா, காரைநகர்
23. கி.கிருஷ்ணகுமாரி, முழங்காவில்
24. எஸ்.ஆனந்தி, மீசாலை
25. து.கிருஷ்ணகுமார், ஊர்காவற்றுறை
26. து.நிக்ஷன், ஊர்காவற்றுறை
27. நா.நந்தினி, பொன்னகர்
28. பே.தட்சிகா, ஐயன்கன்குளம்
29. மோ.மிதுனகோபி, ஐயன்கன்குளம்
30. ச.கிருசாந்தினி, ஐயன்கன்குளம்
31. த.தயாழினி, ஐயன்கன்குளம்
32. ரி.தமிழ்வாணி, ஐயன்கன்குளம்

# குறுக்கெழுத்துப் போட்டி - 52
## சரியான பதில் எழுதியவர்கள்

01. ஆ.வசந்தகுமார், பாண்டவெட்டை
02. வ.ஜெயாழினி, பாண்டவெட்டை
03. வ.குவாழினி, பாண்டவெட்டை
04. வ.றோசாமலர், பாண்டவெட்டை
05. வ.ஜோகனன், பாண்டவெட்டை
06. வ.தயாழினி, பாண்டவெட்டை
07. செ.எமிமாள், பாண்டவெட்டை
08. சி.ரதீஸ்வரி, பாண்டவெட்டை
09. கே.போல்ராஜ், காரைநகர்
10. பா.கோமதி, காரைநகர்
11. கே.சசிதா, காரைநகர்
12. எஸ்.மாக்கிறட், மீசாலை
13. அ.சுதர்சினி, வேரவில்
14. பா.நேருதி, மீசாலை
15. சி.தங்கமணி, மீசாலை
16. இ.சுவேந்தன், மீசாலை
17. வி.தனுஷியா, மீசாலை
18. இ.சுரேகா, மீசாலை
19. வி.சிறிகரன், மீசாலை
20. நா.சிவபாக்கியம், காரைநகர்
21. பா.வதனி, காரைநகர்
22. பா.மோகனதாஸ், காரைநகர்
23. பா.தர்சினி, காரைநகர்
24. அ.எஸ்தர், காரைநகர்
25. அ.கம்சிகா, காரைநகர்
26. நா.கிறிஸ்தீனா, காரைநகர்
27. செ.நகுலா, பாண்டவெட்டை
28. அ.கிருசாந்தன், காரைநகர்
29. அ.துர்க்கா, காரைநகர்
30. க.சாந்தா, மானிப்பாய்
31. ம.ஜெயந்தி, மானிப்பாய்
32. பி.கேசமணி, மானிப்பாய்
33. நா.கஸ்தூரி, மானிப்பாய்
34. செ.லிசம்மா, நாவற்குழி
35. ரி.முகுந்தராசா, நாவற்குழி
36. மு.சுபாசினி டனி, நாவற்குழி
37. கி.கிருஷ்ணகுமாரி, முழங்காவில்
38. எஸ்.சரோஜா, மீசாலை
39. எஸ்.சஜூகன், மீசாலை
40. எஸ்.ஆனந்தி, மீசாலை
41. நா.நந்தினி, பொன்னகர்
42. பே.தட்சிகா, ஐயன்கன்குளம்
43. மோ.மிதுனகோபி, ஐயன்கன்குளம்
44. ச.கிருசாந்தினி, ஐயன்கன்குளம்
45. த.தயாழினி, ஐயன்கன்குளம்
46. ரி.தமிழ்வாணி, ஐயன்கன்குளம்






**ஜெ**பத்தைக் குறித்து உங்களோடு பேசவிரும்புகின்றேன். **மத்தேயு 7:7-8 (7.) கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். 8. ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.** இங்கே ஜெபத்தின் மூன்று படிநிலைகளைக் காணமுடியும்.

## 01. கேட்கும் ஜெபம்

பெற்றுக்கொள்ளும்படியாய் கேட்பது, எங்களுடைய தேவைகளுக்காய் கேட்பது. **1யோவான் 5:14 நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்.** ஜெபமானது அவருடைய சித்தத்தோடு இணைந்ததாய் இருக்க வேண்டும் என்று வேதம சொல்லுகின்றது. **ஆகவே உங்களுடைய தேவைகளை அவருடைய வார்த்தையின்படி, சித்தத்தின்படி கேட்டால் பெற்றுக் கொளவீர்கள்.** ஒரு வசனத்தை மாத்திரம் பற்றிப்பிடித்து ஜெபிப்பது அல்ல ஜெபம். மாறாக, அதைக் குறித்து பரிசுத்த வேதாகமம் என்ன கூறுகின்றது என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுது தேவன் உங்களுடைய ஜெபங்களுக்கு பதிலளிப்பார்.

## 02. தேடுவது

உலகத்திற்குரிய காரியங்களை அல்ல; ஆவிக்குரிய காரியங்களைத் தேட வேண்டும். **தேவன் யார் என்பதனை தேடுவதையே ஆண்டவர் எதிர்பார்க்கின்றார்.** மோசே தேவனால் பார்வோனிடத்தில் அனுப்பப்படுகின்ற போது மோசே தேவனை நோக்கி கேட்டான் நீர் யார் என்று? அதற்கு தேவன் சொன்னார்: நான் இருக்கிறவராய் இருக்கின்றேன் என்று. அவரை அறிகிறதற்காக தேட வேண்டும். மாத்திரமல்ல, அவரை அன்பு செலுத்துகிறதிலும் நாம் அவரைத் தேட வேண்டும. உங்களுடைய முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் அவரைத் தேட வேண்டும். தேவனுடைய முகத்தை ஆசீர்வாதத்திற்காக மாத்திரம் தேடக்கூடாது.

*சில வேளை அவர் உங்களை மறந்தது போல இருக்கலாம், பல வருடங்களாக உங்களுக்கு அவர் பதில் கொடுக்காமல் இருக்கலாம், ஆனால் அவரைக் கண்டு பிடிக்கும்மட்டாக நாம் அவரைத் தேடுகின்றோமா என்பதனை தேவன் எதிர்பார்க்கின்றார்.*

**அவரை நீங்கள் கண்டு கொள்கின்ற போது தான் அவர் மெய்யான தேவன் என்பதனை அறிந்து கொள்வீர்கள். எனவே ஆவிக்குரிய காரியங்களுக்காக நீங்கள் அவரைத் தேடவேண்டும்.** சில வேளை அவர் உங்களை மறந்தது போல இருக்கலாம், பல வருடங்களாக உங்களுக்கு அவர் பதில் கொடுக்காமல் இருக்கலாம், ஆனால் அவரைக் கண்டு பிடிக்கும்மட்டாக நாம் அவரைத் தேடுகின்றோமா என்பதனை தேவன் எதிர்பார்க்கின்றார். **சங்கீதம் 63:8 என் ஆத்துமா உம்மைத் தொடர்ந்து பற்றிக் கொண்டிருக்கிறது: உமது வலதுகரம் என்னைத் தாங்குகிறது.** அவரைக் கண்டு பிடிக்குமட்டாக தொடர்ந்து அவரைப் பற்றிக் கொண்டிருக்க வேண்டும். தாகமுள்ள ஆத்துமாவோடே அவரைத் தேடினால் அவரைக் கண்டு கொள்வீர்கள். **லூக்கா 1:53 பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி,** பசியாயிருந்த 5000 பேரை இயேசு போஷித்தார் என்று வேதம் சொல்லுகின்றது. எனவே தேவன் மேலே நீங்கள் தாகமாய் இருந்தால் நிச்சயமாக அவர் உங்களை நிரப்புவார்.

## 03. தட்டுவது

வேதம் சொல்கின்றது: தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். என்ன திறக்கப்படும்? ஒரு கதவு. இயேசு கிறிஸ்து சொன்னார்: நானே வழி. நீங்கள் அந்தக் கதவிலே தட்டுகின்ற பொழுது திறக்கப்படும். **கதவைத் தட்டுகின்ற நிலைக்குள் வருகின்ற பொழுது நீங்கள் எந்த வார்த்தையும் பேசக்கூடாது. அமைதியாய் இருக்க வேண்டும். தட்டி, பிற்பாடு காத்திருக்க வேண்டும். அவர் உங்களை உள்ளே அழைக்கும் படி கதவைத் திறக்குமட்டாக காத்திருக்க வேண்டும்.** ஒரு வார்த்தையும் சொல்லாமல், வேறு சிந்தனைகளைச் சிந்திக்காமல், அந்த இடத்திலே தேவனுடைய பிரசன்னத்தை அனுபவிக்க வேண்டும். பிற்பாடு ஒரு நிலை வருகின்ற போது அந்த தட்டப்பட்ட கதவு உங்களுக்காய் திறக்கப்படும். ஆகவே கதவைத்

தட்டி அமைதியாய் காத்திருங்கள். ஒரு வார்த்தையும் பேசாமல் ஜெபிக்கின்ற ஜெபத்தைக் குறித்து கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? இந்த வழியிலே தான் தேவன் உங்களைக் கொண்டு செல்ல விரும்புகின்றார். இது தான் ஜெபத்தினுடைய மூன்றாவது நிலை. **ஏசாயா 40:31 கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து. கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள். நடந்தாலும் சோர்ந்து போகார்கள்.** பிரச்சனையைக் குறித்து அதிகமாய் சிந்திக்க மாட்டார்கள். வேகமாய் ஓடுகின்ற ஆற்றைக் குறித்து கழுகு அதிகமாய் சிந்திக்காது. அது அதற்கு மேலாக பறந்து செல்லும்.

எனவே நீங்களும் உங்களுடைய பிரச்சினையைக் குறித்து சிந்திக்காமல், உங்களுடைய கண்களைக் கர்த்தர் மேல் பதிய வையுங்கள். கர்த்தருக்கு காத்திருக்கிறவர்கள் தான் புது பெலன் அடைவார்கள்; ஆவிக்குரிய ரீதியிலே வளர்வார்கள். **மத்தேயு 6:6 நீயோ ஜெபம்பண்ணும் போது. உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து. உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது. அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்.** நீங்கள் இப்படிப்பட்ட அனுபவத்திற்குள்ளாய் வரும் போது எல்லாவற்றையும் மறந்து தனித்து தேவ பிரசன்னத்திலே இருக்க வேண்டும். <u>ஆனால் அந் நேரத்தில் தான் நாய் குரைக்கும், தொலைபேசி மணி அடிக்கும், சில வேளை குழந்தை அழும். ஆனால் இவை எல்லாவற்றுக்கும் உங்களுடைய காதை அடைத்துவிட வேண்டும்.</u> உங்களுடைய அறைக்குள் பிரவேசித்து கதவைப் பூட்டி தேவனிடத்திலே காத்திருங்கள்.

> **கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து. கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.**

சார்லஸ் மற்றும் ஜோண் வெஸ்லியின் தாயாருக்கு 18 பிள்ளைகள். ஒவ்வொரு நேரமும் அவர் கவனம் செலுத்த வேண்டிய காரியங்களாய் இருந்தது. ஆனால் அந்த 18 பிள்ளைகளை கவனிக்கின்ற பொறுப்பு இருந்தும் அவள் ஒவ்வொரு நாளும் கதவைப்பூட்டி ஜெபத்திலே ஒரு மணி நேரம் செலவிடுவார். அவருடைய சில பிள்ளைகள் மரித்துப்போனார்கள். அப்படி இருந்தும் அவர் ஜெபிக்கின்றவராய் இருந்தார். பிற்பாடு அவள் இரண்டு பிரசித்த பெற்ற கிறிஸ்தவ ஊழியர்களை உலகத்திற்கு கொண்டு வந்தாள். அவர்கள் சார்லஸ் வெஸ்லி, ஜோண் வெஸ்லி என்பவர்கள். ஆகவே கதவைப்பூட்டி அவருக்கு முன்பாக அமைதியாக இருக்க வேண்டும். நாங்கள் கேட்டு, முறைப்பாடு செய்து கொண்டிருக்கக் கூடாது. மாறாக அமைதியாக காத்திருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து அவர் உங்களுக்கு முன்பாகவே இருக்கின்றார். **சங்கீதம் 6:8**[b] **கர்த்தர் என் அழுகையின் சத்தத்தைக் கேட்டார்.** அவர் பக்கத்திலே இருக்கின்றார் என்பதனை தாவீது உணர்ந்து அறிக்கையிடுகின்றார். **சங்கீதம் 46:10**[a] **நீங்கள் அமர்ந்திருந்து. நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்;** தேவன எங்களுக்காய் கிரியை செய்யும் மட்டும் நாம் அவருக்காய் காத்திருக்க வேண்டும்.

ஒரு நாள் காலை வேளை எழுந்து தேனீர் அருந்திவிட்டு, பிற்பாடு இசையை போட்டு ஒரு மணி நேரம் ஜெபிப்பது வழமை. 8.30 மணிக்கு மிகப்பெரிய தேவனுடைய தாசன் ஒருவருடைய நிகழ்ச்சியைப் பார்ப்பேன். வழமைக்கு மாறாக நான் 6.30மணிக்கு எழுந்து என்னுடைய இருக்கையிலே அமர்ந்து கொண்டேன். எந்த இசையினையும் போடாமல் மிகவும்

**அமைதியாக அமர்ந்திருந்தேன். அது என்னுடைய ஜெப அறையானதால் அங்கே தேவனுடைய பிரசன்னம் இருந்தது. பிற்பாடு இரண்டு மணித்தியாலங்கள் கடந்து விட்டது. இப்பொழுது அந்த நிகழ்ச்சியைப் பார்க்கின்ற நேரம் என்று உணர்ந்தேன். ஆனால் அப்பொழுது தான் நான் ஜெபிக்கின்ற நேரத்திலே ஜெபிக்கத் தவறிவிட்டேன் என்னை மன்னியும் ஆண்டவரே என்று சொன்னேன். அப்பொழுது ஆண்டவர் என்னிடமாய் கூறினார்: நான் இந்த நிலையை சந்தோஷமாய் அனுபவிக்கின்றேன் என்றார்.** தேவனைப் பிரியப்படுத்துவதன் நிமித்தம் தேவன் பிரியமாய் இருந்தார்.

எனவே தேவனுடைய பாதத்திலே அமைதியாக காத்திருக்க ஆரம்பித்தேன். சில வேளை 5, 10, 20 நிமிடங்களாக அமைதியாக காத்திருப்பேன். தேவனுடைய பிரசன்னத்தை அனுபவிப்பது அல்லது சந்தோஷமாய் இருப்பது. அப்படிப்பட்ட பிரசன்னத்திற்குள்ளாய் செல்லும் போது **சங்கீதம் 23:2-3 (2) அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டு போய் விடுகிறார். 3. அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.** அவர் எங்களை நீதியின் பாதைகளில் நடத்துகின்ற தேவனாய் இருப்பார். அவர் அமர்ந்த தண்ணீர்களண்டை எங்களை நடத்திக் கொண்டு செல்வார். **நீங்கள் அமைதியாக இருக்கின்ற போது அவர் எங்களை நடத்திச் செல்வார். அவர் உங்களுக்கு அருகிலே இருந்தால் உங்களுடைய ஆத்துமாவைத் தேற்றுவார்.** உங்களுடைய ஆத்துமா என்று சொல்லும் போது; உங்களுடைய சிந்தனை, சித்தம், உணர்ச்சிகளோடு சம்பந்தப் பட்டது. ஆகவே அமைதியாக இருக்கின்ற அந்த நேரத்திலே உங்கள் சித்தத்தை, சிந்தனையை, உணர்ச்சிகளை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கின்றீகள் அப்பொழுது அவர் உங்களை எடுத்து, சுத்திகரித்து உங்களை இன்னும் அதிகமாக அருகிலே நெருக்கமாக கொண்டு வருவார். அப்பொழுது உண்மையான ஒரு உறவை தேவனோடு கொள்வீர் கள். **அது தான் அப்பா—மகன் என்ற உறவு நிலை. அப்பொழுது தான் நீங்கள் அப்பா இயேசுவே! என்று அவரை அழைக்கமுடியும்.**

மிகவும்சிறந்த, தூய்மையான, பரிசுத்தமான இயேசு கிறிஸ்துவின் உறவுக்குள் கட்டியெழுப்பப்படுவீகள். அதனுடைய இரகசியம்என்னவென்றால்; கதவைத்தட்டி அமைதியாக காத்திருப்பதாகும். ஒரு வார்த்தையும் பேசாமல், ஒரு சிந்தனையும் சிந்திக்காமல், காத்தி ருக்கின்ற போது ஒரு கஷ்டமான காரியம் என்னவென்றால்: வேறு சிந்தனைகள அந்த நேரத்திலே ஆட்கொள்ளும். **லூக்கா 17:21b இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள இருக்கிறதே என்றார்.** தேவனுடைய ராஜ்யம் என்று சொல்லும் போது அங்கே சிங்காசனம் உண்டு. அந்த சிங்காசனத்திலே தேவன் வீற்றிருக்கின்றார். **யோவான் 14:23 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்.** எனவே தேவன் உங்களுக்குள்ளே இருக்கின்றமையால் வேறு எண்ணங்கள் உங்களைத் தாக்குகின்ற, குழப்புகின்ற போது நீங்கள் உங்கள் உள்ளத்திலே இருககின்ற தேவனைப்பார்த்து ஆண்டவரே நான் உம்மை நேசிக்கிறேன், என்று சொல்லுங்கள்.

ஏனென்றால் அவர் உங்களை முதலாவது நேசித்தார். ஆகவே

நாங்கள் இயேசு கிறிஸ்துவை அறிகின்ற அறிவுக்குள்ளாய் வரவேண்டும். அமைதியாக அவருடைய பிரசன்னத திலே காத்திருக்கும் போது அவரைக் குறித்து அறிந்து கொள்ளலாம். அப்பொழுது அவர் உங்களுக்கு வெளிப்படுவார், பேசுவார். அந்த பரிசுத்த பிரசன்னத்திலே உங்களோடு பேசும்படியாய், இடைப் படும்படியாய் தொடர்ந்தும் கற்றுக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். அப்பொழுது அவர் உங்களோடு பேசுவார். **அவர் உங்களோடு பேசுவதற்கு உங்களுடைய செவியை ஆயத்தமாக திறந்து வையுங்கள். அவர் உங்களோடு பேசும் போது அதற்கு கீழ்ப்படிய வேண்டும் என்பதனைக் குறித்து நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் கீழ்ப்படிய மறுக்கின்ற போது அவர் பேசுவதை நிறுத்தி விடுவார்.** தேவனிடத்திலே காத்திருங்கள்.

**தேவனுடைய சத்தத்திற்கு காத்திருக்கும் போது சில வேளை உங்களுடைய சிந்தனையில் இருந்து சத்தம் வரும். ஆனால் அதற்கு அல்ல, தேவனுடைய சத்தத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்.**

அந்த தேவ பிரசன்னத்திலே காத்திருப்பதென் பது மிகவும் அருமையானது. அதை உங்களுடைய வீட்டிலே, உங்களுடைய அறையிலே அனுபவிக்க முடியும். அப்பொழுது தேவன் நீங்கள் கீழ்ப்படியத்தக்க காரியங்களைச் சொல்லுவார். நாம் அவருடைய சத்தத்தைக் கேட்பதற்கு கற்றுக் கொள்ள வேண்டும்.

தேவனுடைய சத்தத்திற்கு காத்திருக்கும் போது சில வேளை உங்களுடைய சிந்தனையில் இருந்து சத்தம் வரும். ஆனால் அதற்கு அல்ல, தேவனுடைய சத்தத்திற்கு கீழ்ப்படிய வேண்டும். ஒரு நாள் நான் புகையிரதத்திலே சென்று கொண்டிருக்கும் போது ஒரு நபரோடு இரட்சிபைக் குறித்து பேசும்படி தேவன் எனக்கு சொன்னார். அதனைக் கூறுவதற்கு நான் வெட்கப்பட்டு, பயத்தோடு இருந்த போது ஆண்டவர் சொன்னார்: சிலவேளை அவன் ஒரு மாதத்திற்குள் மரித்துப் போய்விடுவான் என்றார். அப்பொழுது நான் ஜெபிக்க ஆரம்பித்தேன். ஆண்டவரே அவனை சாகவிடாதேயும், வேறு யாரையா வது அனுப்பி அவனோடு பேசப்பண்ணும் என்றேன். பிற்பாடு சொன்னேன் அடுத்த முறை அவனோடு பேசுகின்றேன் என்றேன். பிற்பாடு மூன்று மாதங்களின் பின்பு நான் இறங்குவதற்கு ஒரே ஒரு தரிப்பு நிலையம் தான் இருந்தது. அந்த நிலையத்தில் இருந்து அடுத்த நிலையத்திற்கு செல்வதற்கு $1\frac{1}{2}$ நிமிடம் தான் இருக்கின்றது. அப்பொழுது எனக்கு முன்பாக ஒரு மனுஷன் தெரிப்பட்டார். ஆண்டவர் சொன்னார் அவனோடு பேசு என்பதாக. அந்த $1\frac{1}{2}$ நிமிடத்திலே அவரோடு பேசும் போது அறிந்து கொண்டேன், அவர் திருமணமாகி 6 வருடங்கள் கடந்தும் பிள்ளை இல்லாமல் இருக்கின்றார் என்பதனை. ஆகவே எனக்கு கிடைத்த அந்த நேரத்திலே என்னுடைய தொலைபேசி இலக்கத்தை மாத்திரம் குறித்துக் கொடுத்தேன். ஆனால் அவருக்கு ஒரு வார்த்தை சொன்னேன், நீங்கள் ஆலயத்திற்கு செல்லுங்கள் அங்கு அவர்கள் உங்களுக்காக ஜெபிப்பார்கள். அப்பொழுது உங்களுக்கு பிள்ளை கிடைக்கும் என்றும் சொன்னேன்.

தேவன் எங்களுக்கு கூறுவதனைக் கேட்டு நாம் கீழ்ப்படிவதனை எங்களுடைய பழக்கமாக கொள்ள வேண்டும். நாம் அவருடைய சமூகத்திலே அமைதியாக இருக்கும் போது ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்; அவர் தான் தேவன் என்பதனை. தேவனுக்கு முன்பாக அமைதியாக காத்திருக்கின்ற போது அவருடைய வழிகளை அறிந்து கொள்வீர்கள், அவருடைய சித்தத்தை அறிந்து கொள்வீர்கள், அவருடைய வார்த்தகளை அறிந்து கொள்வீர்கள். **ஏசாயா 30:21 நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும்.**

**இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே. இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்.** சத்தம் அல்ல வார்த்தையைக் கேட்போம் என்று வசனம் சொல்லுகின்றது. **தேவனுடைய வார்த்தை உங்களுடைய வாழ்க்கைக்கு உயிரூட்டுகின்றதாய் இருக்கின்றது. உங்களுக்கு எது தேவையாய் இருக்கின்றதோ அதனை சந்திக்கத்தக்கதாக அவருடைய பிரசன்னம் இருக்கின்றது.** அந்த வார்த்தை உங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையை உற்சாகப்படுத்தும், தைரியப்படுத்தும். தேவனோடு இருக்கின்ற உறவு நிலை உண்மையான நிலைக்கு கடந்து வரும். அது ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்ற உறவு நிலையாக இருக்கும். அத்துடன் அது மிகவும் நெருக்கமான உறவு நிலையாய் இருக்கும்.

இப்படிப்பட்ட தேவனோடு கூட ஒரு நெருக்கமான உறவு நிலை உங்களுக்குத் தேவையா? தேவன் சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் உருவாக்கினர். அவராலே மாத்திரமே உங்களைத் தன்னுடைய சொந்த பிள்ளையாக மாற்றமுடியும். அப்பொழுது நீங்கள் அவரை அப்பா இயேசுவே என்று அழைக்க முடியும். ஒரு பிள்ளையை எவ்வளவு கவனமெடுத்து பாதுகாக்கின்றோமா அதே போல ஆண்டவர் எங்களுக்குச் செய்வார், வேதத்தின் முக்கியத்துவத்தை நமக்கு வெளிபடுத்துவார். ஆவிக்குரிய மனமகிழ்ச்சியான கொண்டாட்டங்களை நமக்குத் தருவார். **எபேசியர் 2:7 கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார்.** அவரோடு கூட எழுப்பி, அவரோடு கூட உன்னதங்களிலே உட்காரவும் செய்தார். என்னுடைய பிரச்சனைகளுக்கு மேலாகவும், உலக காரியங்களுக்கு மேலாகவும் உலகம் உங்களுக்கு காண்பிக்கின்ற எல்லாவற்றுக்கும் மேலாயும் அவரோடு கூட உன்னதங்களிலே உட்காரவும் செய்தார்.

எனவே கதவை தட்டிக் காத்திருக்க கற்றுக் கொள்ளுங்கள். இயேசு கிறிஸ்துவின் அறைக் கதவைத் தட்டிக் காத்திருக்க வேண்டும். அவர் அடுத்த அறையிலே இருக்கின்றார், அவர் உங்களுக்காக கதவைத் திறக்க காத்திருக்கின்றார். கர்த்தருக்கு காத்திருந்து புதுபெலன் அடைந்து கழுகைப் போல செட்டைகளை விரித்து உங்களுடைய பிரச்சினைகளுக்கு மேலாக பறப்பீர்கள். உன்னதங்களிலே கிறிஸ்துவோடு கூட இருப்பீர்கள். இது தான் உங்களுடைய ஜெப வாழ்க்கையின் மூன்றாவது நிலை. இது உங்களுக்கு விலையேறப்பெற்றதாக, உற்சாகமூட்டுகின்றதாக, உண்மை நிலையைக் கொண்டு வருகின்றதாக இருக்கும். **தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். இயேசு கதவை உங்களுக்காக திறப்பார். ஆனால் அந்த இரகசியம் என்னவென்றால் நீங்கள் ஒரு வார்த்தையும பேசக்கூடாது. ஒரு சிந்தனையும் சிந்திக்கக்கூடாது. அவருடைய பிரசன்னத்திலே மூழ்கிப்போக வேண்டும்.**

என்னுடைய வேதப்படிப்பு நிலையத்திலே இந்த அமைதியான ஜெப வேளைக்காக 5, 10 நிமிடங்கள் ஒதுக்குவோம். அவர்கள் இந்த வேதத்தின் உண்மை சத்தியத்தை கண்டு கொள்வார்கள். **சங்கீதம் 16:11 ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு.** அவருடைய பிரசன்னத்திலே பரிபூரண

மகிழ்ச்சி உண்டு, அவருடைய பிரசன்னத்திலே நித்திய பேரின்பம் உண்டு. ஒரு வார்த்தையும் பேசாமல் காத்திருக்க வேண்டும். **மோசே என்ற தேவமனிதன் அவருடைய பிரசன்னத்திற்குள்ளாய் வரும் போது தேவனோடு ஒரு நண்பனைப் போல, சிநேகிதனைப் போல பேசினான். தேவனை முகமுகமாய் அவன் சந்தித்தான்.** தேவனுடைய மகிமை மோசேயின் மேல் பிரகாசித்தது. எங்களுடைய கண்களை இயேசு கிறிஸ்துவின் மேல் திருப்பி அவர் மேல் நோக்கமாய் இருக்கின்ற போது, அவர் உங்களுக்காய் காரியங்களை நடப்பிப்பார். அவருக்கு முன்பதாக காத்திருங்கள். வேறு எண்ணங்கள் வருகின்ற போது அவைகளை ஒருபுறம்பாகத் தள்ளிவிட்டு, இயேசு கிறிஸ்துவைப் பார்த்து, ஆண்டவரே நான் உம்மை நேசிக்கிறேன் என்று சொல்லுங்கள். இதனை ஒவ்வொரு நாள் காலையிலும் நீங்கள் செய்வதற்காக கொடுக்கப் படுகின்ற ஒரு வேலை.

அவருக்காய் காத்திருக்கும் போது அனேக இரகசியங்களை வெளிப்படுத்துவார். அது மட்டுமல்ல, அவரைப் பார்த்து அப்பா இயேசுவே என்று கூப்பிடக்கற்றுக் கொள்ளுங்கள்.

மூன்று நிமிடங்களாவது அமைதியாக தேவ பிரசன்னத்திலே காத்திருக்க பழகிக்கொள்ளுங்கள். **நான் என்னுடைய ஜெப வேளையிலே அனைத்து காரியங்களுக்காகவும் ஜெபித்து முடித்து விட்டு இறுதியாக 5, 10 நிமிடங்கள் தேவ பிரசன்னத்திலே அமைதியாக காத்திருப்பேன்.** அப்படி நீங்கள் காத்திருந்தால் இயேசு கிறிஸ்துவோடு ஒரு நெருக்கமான உறவு நிலையை கொண்டிருப்பீர்கள். அது உண்மையானது. அவருடைய பிரசன்னம் உங்களுக்காய் கடந்து வரும். அவருக்காய் காத்திருக் கும் போது அனேக இரகசியங்களை வெளிப்படுத்துவார். அது மட்டுமல்ல, அவரைப் பார்த்து அப்பா இயேசுவே என்று கூப்பிடக் கற்றுக் கொள்ளுங்கள். இது தான் ஜெபத்தின் மூன்றாவது நிலை.

இப்படிப்பட்ட பயிற்சியை விரும்புகின்றீர்களா? தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்கு திறக்கப்படும். மோசே இப்படிப்பட்ட நிலைக்கு கடந்து வந்தான். **யாத்திராகமம் 33:21-22 (21.) பின்னும் கர்த்தர்: இதோ, என்னண்டையில் ஒரு இடம் உண்டு: நீ அங்கே கன்மலையில் நில்லு. 22. என் மகிமை கடந்துபோகும்போது, நான் உன்னை அந்தக் கன்மலையின் வெடிப்பிலே வைத்து, நான் கடந்து போகுமட்டும் என் கரத்தினால் உன்னை மூடுவேன்.** நாம் ஒன்றாய் அந்த உன்னத பரிசுத்தமான நிலையில் உட்காருவோம் என்பதாய் கூறுகின்றார். மோசேயின் அனுபவம் இது. நானும் நீங்களும இந்த அனுபவத்திற்குள்ளாய் கடந்து வரவேண்டும். உங்களுக்கும் இந்த அனுபவம் தேவையா? நீங்கள் தட்டி காத்திருக்க விருப்பமா? விருப்பமானால் இந்த ஜெபத்தின் மூன்று படிநிலைகளையும் கைக்கொண்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். அவருடைய வருகை மிகவும் சமீபமாய் இருக்கின்றது! எனவே ஆயத்தமாவோம்! ஆயத்தப்படுத்துவோம்!!.

**முற்றும்.**

**தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக !**

**போதகர் T. T. பிலிப் (லண்டன்)**

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 140.00 Per Year |
| இந்தியா | S.L Rs 390.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 840.00 Per Year |
| சிங்கப்பூர், மலேசியா | S.L Rs 420.00 Per Year |
| மத்திய கிழக்கு நாடுகள் | S.L Rs 510.00 Per Year |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா | S.L Rs 720.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்

## சந்தா கூப்பன்

பெயர் :-.......................................................

விலாசம் :-.......................................................

.......................................................................

.......................................................................

.......................................................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

**Zion Church Office,**
**No. 347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

To:

TO:
MRS. Y.POOMANY,
ZION CHURCH,
JAFFNA.